<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No.48/2020 Date: 13.12.2023

PW 1- தங்கவேல்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அருணாச்சலம் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் நேரடியாக கிரயம் செய்து கொடுக்கும்படி தான் கேட்டுள்ளேன். மேற்படி அறிவிப்பை மொத்தம் 3 நபர்களுக்கு அனுப்பினேன். பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்ற விவரம் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டையில் குறிப்பிட்டுள்ள பிறந்த தேதி எனக்கு தெரியாது. என் மகளுக்கும், சசிகுமாருக்கும் திருமணம் எந்த திருமண மண்டபத்தில் நடைபெற்றது என்றால், என் மகள் என்னுடைய சம்மதமில்லாமல் திருமணம் செய்து கொண்டார். தற்போது எனக்கும், என் மகளுக்கும் பேச்சுவார்த்தை இல்லை. என் மகளுக்கும், சிதம்பரத்திற்கும் பேச்சுவார்த்தை உள்ளதா என்று எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையின் விவரம் எனக்கு தெரியும். அதில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வழக்கறிஞரிடம் கேட்டு விவரம் தெரிந்து கொண்டேன். பிரதிவாதி சிதம்பரத்திடம் வரவு செலவு வைத்துக்கொண்டதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கும், சிதம்பரத்திற்கும் பல ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளதாக சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியாது. இத்தாவாவில் எத்தனை பேர் பிரதிவாதிகள் என்ற விவரம் எனக்கு தெரியும். மொத்தம் 3 பேர் பிரதிவாதிகள். அருணாச்சலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு என்னென்ன ஆவணங்கள் கொண்டு வந்திருந்தார் என்ற விவரம் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை. அருணாச்சலம் கொண்டு வந்திருந்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ஒப்பந்த பத்திரம் கொண்டுவந்திருந்தார். ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும் காலத்தில் தாவா சொத்தில் முன் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டதா என்றால் இல்லை. அக்ரிமெண்ட் பத்திரம் மட்டும் பார்க்கப்பட்டது. சிதம்பரத்திற்கும் அருணாச்சலத்திற்கும் பல ஆவணங்களின் மூலம் பண பரிவர்த்தனை நடந்திருக்கும் பட்சத்தில் என்னுடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாக சொல்வது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 தேதியில் தாவா சொத்தை விற்பனை செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.1 ஒப்பந்தமும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அதற்காக பணம் வாங்கிக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து மட்டும் தான்

பிரதிவாதிகளுக்கு இருக்கும் ஒரே சொத்து என்பதால் அதை அவர்கள் எப்போதும் விற்க தேவையில்லை என்றால் சரியல்ல. சிதம்பரத்தின் காட்டிற்கு அருகில் தாவா சொத்து இருப்பதால் அதை அபகரிக்கும் நோக்கில் சிதம்பரம் என்னை கருவியாக பயன்படுத்தி வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை மோசடியாக உருவாக்கியுள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தாவாவில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அருணாச்சலம் என்பவரின் மனைவியை நானும், சிதம்பரம் வகையறாவும் தாக்கியதாகவும், தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாகவும் போலிஸ் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-தங்கவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.